தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 151 | 4 Pages | 29.12.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 151 | 4 பக்கங்கள் | 29.12.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று

**விளக்கம்:**
கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின் மேல், உயிரைக்கொண்டு செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

# பிரேசிலில் பாலம் இடிந்து விழுந்ததில் 8 பேர் பலி



ரியோ டி ஜெனிரோ, டிச.29

வடகிழக்கு பிரேசிலில் உள்ள டோகன்டின் ஆற்றின் மீது இருந்த பாலம் கடந்த 22ம் தேதி இடிந்து விழுந்தது.அப்போதுஅந்தபாலத்தில் 3லாரிகள்,பலஇருசக்கரவாகனங்கள் மற்றும் குறைந்தது 2 கார்கள் ஆற்றில் விழுந்தது. இதையடுத்து அங்கு கடற்படை, போலீசார் மற்றும் மீட்புக்குழுவினர் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பாலம் இடிந்து விழுந்ததில் 8 பேர் உயிரிழந்தனர் மற்றும் 9 பேர் மாயமாகியுள்ளனர் என்று பிரேசில் கடற்படை இன்று தெரிவித்துள்ளது. மாயமான 9 பேரை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். ஆற்றில் விழுந்த 3 லாரிகளில் இரண்டில் கந்தக அமிலம் இருந்ததால், அப்பகுதியில் உள்ள 19 நகராட்சிகளில் குடிநீரை பயன்படுத்த அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

# ஜெர்மனியில் நாடாளுமன்றம் கலைப்பு: தேர்தல் தேதியை அறிவித்த ஜனாதிபதி



பிராங்க்பர்ட், டிச.29

ஜெர்மனியில் நாடாளுமன்றத்தை கலைத்து ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியர் இன்று உத்தரவிட்டுள்ளார். பிப்ரவரி 23ம் தேதி புதிய தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார்.

சான்சலர் ஓலாப் ஸ்கால்ஸ் தலைமையிலான ஆளும் கூட்டணியில் விரிசல் ஏற்பட்ட நிலையில், கடந்த 16ம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சான்சலர் ஸ்கால்ஸ் தோல்வி அடைந்தார். அரசு மெஜாரிட்டியை இழந்தது. இதையடுத்து முன்கூட்டியே தேர்தலை நடத்த பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் ஒப்புதல் அளித்தனர். அதன்பேரில் தேர்தல் தேதியை ஜனாதிபதி இன்று அறிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய அரசியலமைப்பானது, நாடாளுமன்றம் தன்னைத் தானே கலைக்க அனுமதிக்காததால், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தலாமா என்பதை ஜனாதிபதிதான் முடிவு செய்ய வேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் 60 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் ராணுவம் அதிரடி தாக்குதல் பயங்கரவாத குழு தலைவர் உள்பட 15 பேர் பலி



இஸ்லாமாபாத், டிச.29

பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்டுங்க்வா மற்றும் பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக காவல் துறை மற்றும் ராணுவ வாகனங்களை குறிவைத்து தற்கொலைப் படை மற்றும் துப்பாக்கி சூடு தாக்குதல்களை பயங்கரவாதிகள் நிகழ்த்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பயங்கரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் ராணுவம் தீவிரப்படுத்தி வருகிறது. அந்த வகையில், கைபர் பக்டுங்க்வா மாகாணத்தில் உள்ள 3 இடங்களில் பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது நடந்த துப்பாக்கி சூட்டில் பயங்கரவாத குழு தலைவர் உள்பட 15 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது. இதன்படி பன்னு மாவட்டத்தில் உள்ள ஜானி கேல் என்ற பகுதியில் 2 பேர், வடக்கு வாரிஸ்தானில் நடந்த துப்பாக்கி சண்டையில் 5 பேர் மற்றும் தெற்கு வாரிஸ்தானில் 8 பேர் என மொத்தம் 15 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். அதே சமயம், இந்த துப்பாக்கி சண்டையில் ஒரு ராணுவ வீரர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியாவில் அதிபரை தொடர்ந்து இடைக்கால அதிபர் பதவிநீக்கம்

சியோல், டிச.29

தென்கொரியாவில் கடந்த 3ந்தேதி அதிபர் யூன் சுக் இயோல் திடீரென ராணுவ அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இது தொடர்பாக தொலைக்காட்சியில் உரையாற்றிய யூன்சுக் இயோல், வடகொரிய கம்யூனிஸ்ட் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக தென் கொரியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்படுவதாக தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். இந்த அறிவிப்பிற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. பின்னர் மக்களின் கடும் எதிர்ப்பால் அவசர நிலையை தென்கொரிய அதிபர் வாபஸ் பெற்றார். அதனை தொடர்ந்து தென்கொரிய அதிபரை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தாக்கல் செய்தன. ஆனால் அந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆளுங்கட்சியினர் புறக்கணித்ததால், தீர்மானம் தோல்வி அடைந்தது. தொடர்ந்து 2வது முறையாக அதிபருக்கு எதிரான பதவிநீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதில் மொத்தமுள்ள 300 எம்.பி.க்களில் 204 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனையடுத்து அதிபர் யூன் சுக்இயோல் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இடைக்கால அதிபராக பிரதமர் ஹான் டக்சூவுக்கு நியமிக்கப்பட்டார். இதனிடையே தென்கொரிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில், இடைக்கால அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ஹான் டக்சூவை பதவிநீக்கம் செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த தீர்மானம் 1920 என்ற அடிப்படையில் அதிகபட்ச ஆதரவை பெற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆளுங்கட்சி எம்.பி.க்கள் வாக்கெடுப்பை புறக்கணித்தனர். இதன்படி இடைக்கால அதிபர் ஹான் டக்சூ பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# மாசற்ற மனதுக்கும், தூய அன்பிற்கும் சொந்தக்காரர் விஜயகாந்தை நினைவு கூர்ந்த முதல்வர்



சென்னை, டிச.29

மறைந்த நடிகரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி அவரது நினைவிடத்தில் தொண்டர்கள், ரசிகர்கள் நினைவஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதனிடையே தலைவர்கள் பலரும் விஜயகாந்தை நினைவு கூர்ந்து வருகின்றனர்.

அந்த வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

மாசற்ற மனதுக்கும் தூய அன்பிற்கும் சொந்தக்காரராக விளங்கி, மண்ணைவிட்டு மறைந்தாலும் நமது நெஞ்சங்களில் வாழும் நண்பர் கேப்டன் விஜயகாந்த் அவர்களை நினைவுகூர்கிறேன்! என்று பதிவிட்டுள்ளார்.

# அமைதியான முறையில் பேரணி நடைபெற்றது மகிழ்ச்சி: அமைச்சர் சேகர்பாபு பெருமிதம்



சென்னை, டிச.29

விஜயகாந்தின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கோயம்பேடு தேர்தல் ஆணையத்தில் இருந்து விஜயகாந்த் நினைவிடத்துக்கு பேரணியாக செல்ல காவல்துறை தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது.

இதையடுத்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தலைமையில் தடையை மீறி பேரணி நடைபெற்றது.


ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் பேரணியாக சென்று விஜயகாந்த் நினைவிடத்தில் விளக்கேற்றி பிரேமலதா மரியாதை செலுத்தினார். அவரைத்தொடர்ந்து அமைச்சர் சேகர்பாபு, ஓ.பன்னீர்செல்வம், சீமான் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் விஜயகாந்த் நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்னர் அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ விஜயகாந்த் நினைவு தின பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை பெரிதாக்க வேண்டாம்.

★ பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டாலும் அமைதியான முறையில் பேரணி நடைபெற்றது மகிழ்ச்சி என்று கூறினார்.

# அண்ணாமலை பரபரப்பான அரசியல் செய்ய விரும்புகிறார் திருமா.



கோவை, டிச.29

கோவை சுந்தராபுரத்தில் திராவிடர் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்க கோவை வந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் கோவை விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற சம்பவம் வேதனைக்கு உரியது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபரை உடனடியாக கைது செய்து இருப்பது ஆறுதல் அளிக்கிறது.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பரபரப்பான அரசியல் செய்ய விரும்புகிறார். தமிழகத்தில் அ.தி.மு.க. எதிர்க்கட்சி அல்ல. பா.ஜ.க. தான் என்பதை காட்டிக் கொள்ள அவர் முயற்சி செய்கிறார்.

ஆளுங்கட்சி மீது அவ்வப்போது குற்றம் சாட்டினால் எதிர்க்கட்சி தலைவராகிவிட முடியும் என்று நம்புகிறார்.

இந்த சம்பவத்தில் கைதான ஞானசேகரன் அரசியல் கட்சி தலைவர்களுடன் புகைப்படம் எடுத்து இருக்கிறார் என்ற காரணத்தை காட்டி அதற்கு தி.மு.க. பொறுப்பேற்க வேண்டும் என்று கூறுவது அப்பட்டமான அரசியல் ஆதாய செயல்.

சம்பவத்தில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அரசு மீது குற்றம் சாட்டுவது ஏற்புடையது அல்ல. பாதிக்கப்பட்ட மாணவியின் விவரங்கள் வெளிவந்ததை ஏற்க முடியாது. இதற்கு காரணமாக இருந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செருப்பு போட மாட்டேன், சாட்டையால் தன்னை அடித்துக்கொள்வேன் என்று அண்ணாமலை அறிவித்து உள்ளார். இப்படிப்பட்ட முடிவை அவர் ஏன் எடுத்துக்கொள்கிறார் என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் அகிம்சா வழியை காந்தியடிகள் போல கையில் எடுக்கிறாரா என்பது தெரியவில்லை. எனவே அண்ணாமலையின் போராட்ட அறிவிப்பு நகைப்புக்குரியதாக உள்ளது.

சிறுபான்மையினருக்கான ஒரே தலைவர் பிரதமர் மோடி என்று அண்ணாமலை கூறியது 21ம் நூற்றாண்டின் மிகச்சிறந்த நகைச்சுவை.

என்னை வைத்து அவர்கள் விரும்புகிற அரசியல் சூதாட்டத்தை நடத்த பார்க்கிறார்கள். அதற்கு நாங்கள் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டோம்.

தேர்தல் காலத்தில் தொலைநோக்கு பார்வையுடன் லாப நட்ட கணக்கு இல்லாமல் இயங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். எனவே நாங்கள் யாரையும் மிரட்டவில்லை. எங்களை யாரும் மிரட்டும் நிலையிலும் நாங்கள் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக அண்மையில் மரணம் அடைந்த அல்உம்மா இயக்க தலைவர் பாஷாவின் வீட்டிற்கு சென்ற தொல்.திருமாவளவன், அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

# அனுமதியின்றி போராட்டம் தமிழிசை சவுந்தரராஜன், கரு.நாகராஜன் உள்ளிட்ட 417 பேர் மீது வழக்கு



சென்னை, டிச.29

அண்ணாபல்கலைக்கழகமாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தெலுங்கானா முன்னாள் கவர்னரும், தமிழக பா.ஜ.க. மூத்த தலைவருமான டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் தலைமையில் பா.ஜனதாவினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். போராட்ட களத்திற்கு வந்த தமிழிசை சவுந்தரராஜன் உள்ளிட்ட பா.ஜ.க.வினரை போராட்டத்திற்கு அனுமதி வாங்கவில்லை என கூறி போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நுங்கம்பாக்கம் போலீஸ் நிலையம் அருகே உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மாலையில் விடுவிக்கப்பட்டனர். இந்நிலையில் அனுமதியின்றி போராட்டம் நடத்திய பா.ஜ.க. நிர்வாகி தமிழிசை, கரு.நாகராஜன் உள்ளிட்ட 417 பேர் மீது நுங்கம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் பிரிவின் கீழ் 417 பேர் மீது நுங்கம்பாக்கம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# அன்புமணியுடன் மோதல் ஏற்பட்ட விவகாரம்: ராமதாசுடன் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை




சென்னை, டிச.29

பா.ம.க.வின் பொதுக் குழு கூட்டம் புதுச்சேரியில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கட்சியின் நிறுவனர் ராமதாஸ், கட்சியின் தலைவர் அன்புமணி, கவுரவ தலைவர் ஜி.கே.மணி உட்பட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர். அப்போது புதுச்சேரி இளைஞரணி தலைவராக முகுந்தன் என்பவரை நியமிப்பதாக நிறுவனர் ராமதாஸ் அறிவித்தார். அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட அன்புமணி இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இதுகுறித்து அன்புமணி பேசுகையில், கட்சியில் சேர்ந்து 4 மாதங்கள் கூட ஆகாத ஒருவர் எப்படி இளைஞரணி தலைவராக முடியும்? கட்சியில் உழைக்கக்கூடியவர்கள் பலரும் உள்ளனர் என்று தெரிவித்தார். ஆனால் அதனை பொருட்படுத்தாத ராமதாஸ் கட்சியை உருவாக்கியது நான், கட்சியில் உள்ள பொறுப்பாளர்களை நான் தான் நியமிப்பேன். இதில் உடன்படாதவர்கள் யாராக இருந்தாலும் கட்சியில் இருந்து வெளியேறலாம் என்று தெரிவித்தார்.

இதில், ஆத்திரம் அடைந்த அன்புமணி, எனக்கு சென்னை பனையூரில் அலுவலகம் உள்ளது. என்னை சந்திக்க விரும்புபவர்கள் யாராக இருந்தாலும், அங்கு வந்து உங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று கூறி செல்போன் எண்ணையும் அறிவித்துவிட்டு கூட்டத்தை விட்டு வெளியேறினார். பா.ம.க. இளைஞரணி தலைவர் நியமனம் தொடர்பாக ராமதாஸ் அன்புமணி இடையே பொதுக்குழு கூட்டத்தில் கருத்து மோதல் ஏற்பட்ட நிலையில், ராமதாஸ் உடன் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தைலாபுரத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாசுடன் முக்கிய நிர்வாகிகள் ஜி.கே.மணி, வன்னியர் சங்க தலைவர் அருள்மொழி உள்ளிட்டோர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் அன்புமணியை சமாதானம் செய்ய குழு ஒன்றை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், நாளை அன்புமணியை வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## முதலமைச்சர் தூத்துக்குடி வருகை கட்சியினர் திரளாக கலந்து கொள்ள அமைச்சர் அழைப்பு

தூத்துக்குடி, டிச.29

தூத்துக்குடி, கன்னியாகுமரியில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (ஞாயிற்றுக்கிழமை) தூத்துக்குடி வருகிறார்.

இது தொடர்பாக தி.மு.க. தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளரும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தூத்துக்குடி மாநகரில் (ஞாயிற்றுக்கிழமை), நாளை (திங்கட்கிழமை) நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தூத்துக்குடிக்கு வருகிறார். அவர் நாளை (ஞாயிற்றுக்கிழமை)மாலை4மணிக்கு தூத்துக்குடியில் புதிதாக கட்டப்பட்டு உள்ள நியோ டைடல் பார்க்கை திறந்து வைக்கிறார்.



மாலை 5 மணிக்கு மாணிக்கம் மகாலில் நடைபெறும் தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

நிகழ்ச்சி முடித்து காமராஜர் சாலை, போல்டன்புரம், தேவர்புரம் ரோடு, தென்பாகம் போலீஸ் நிலையம், பாளையங்கோட்டை ரோடு, 3வது மைல் வழியாக சத்யா ரிசாட் செல்கிறார்.

நாளை(திங்கட்கிழமை) காலை 8.30 மணிக்கு புறப்பட்டு, காமராஜ் கல்லூரியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

நிகழ்ச்சி முடிந்து சிவந்தாகுளம் ரோடு, பக்கிள்புரம், புதுகிராமம், வி.இ. ரோடு, அண்ணா சாலை, பாளையங்கோட்டை ரோடு வழியாக கன்னியாகுமரி புறப்பட்டு செல்கிறார். எனவே அனைத்து நிகழ்ச்சிகளிலும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## சனி பிரதோஷத்தை முன்னிட்டு சதுரகிரியில் திரண்ட பக்தர்கள் கூட்டம்



வத்திராயிருப்பு, டிச.29

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற சதுரகிரி சுந்தரசந்தன மகாலிங்கம் கோவில் உள்ளது. இங்கு மாதந்தோறும் பவுர்ணமி, அமாவாசையை முன்னிட்டு பக்தர்கள்சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

மார்கழி மாத பிரதோஷம் (இன்று) மற்றும் அமாவாசையை (30ந்தேதி) முன்னிட்டு இன்று முதல் வருகிற 31ந்தேதி பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பிரதோஷங்களில் சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம்சிறப்பானதாக கருதப்படுகிறது.

அதன்படி இந்த வருடத்தில் இறுதியில் அமைந்துள்ள சனி பிரதோஷமான இன்று சதுரகிரிக்கு செல்ல நூற்றுக்கணக்கான பக்தர்கள் அதிகாலையிலேயே மலையடிவாரமான தாணிப்பாறையில் திரண்டனர். காலை 6.30 மணிக்கு நுழைவு வாயில் திறக்கப்பட்டது.

வனத்துறையினர் தீவிர சோதனை நடத்தி பக்தர்களை மலையேற அனுமதித்தனர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் சுமார் 3 முதல் 4 மணி நேரம் வரை மலையேறி சென்று சுந்தர மகாலிங்கத்தை தரிசனம் செய்தனர்.

மலை பாதைகளில் ஆங்காங்கே வனத்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். குடிநீர் உள்ளிட்ட வசதிகள் கோவில் பகுதியில் செய்யப்பட்டிருந்தது. காலை 10 மணி வரை திரளான பக்தர்கள் மலையேறி சென்று சாமி தரிசனம் செய்தனர். சனி பிரதோஷத்தை முன்னிட்டு சுந்தரசந்தன மகாலிங்கத்திற்கு 18வகையான அபிஷேகங்கள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் ராஜா என்ற பெரியசாமி, செயல் அலுவலர் ராமகிருஷ்ணன் செய்துள்ளனர்.

நாளை விடுமுறை தினம் என்பதால் வழக்கத்தை விட பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரெயில் முன்பு தள்ளி மாணவி கொலை: சதீஷ் குற்றவாளி என தீர்ப்பு



சென்னை, டிச.29

2022ம் ஆண்டு பரங்கிமலை ரெயில் நிலையத்தில் ரெயில் முன்பு மாணவி சத்யபிரியா தள்ளிவிட்டு கொல்லப்பட்டார். இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், இந்த வழக்கு தொடர்பாக சதீஷ் என்பவனை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

அப்போது, சதீஷும், சத்யாவும் காதலித்து வந்ததாகவும் பிறகு சதீஷின் நடவடிக்கைகள் பிடிக்காததால் அவரை விட்டு பிரிய துவங்கியிருக்கிறார்சத்யா. இதை ஏற்றுக்கொள்ள முடியாத சதீஷ், அவ்வப்போது சத்யாவை நேரில் சந்தித்து தன்னை காதலிக்குமாறு தொல்லைகொடுத்ததாகவும் தெரிகிறது. எனினும் சத்யப்ரியா சதீஷின் காதலைஏற்கவேயில்லை. இதனால் ஒருகட்டத்தில் ஆத்திரமடைந்த சதீஷ், கடந்த 2022 அக்டோபர் 13ம் தேதி கல்லூரிக்குச் செல்ல பரங்கிமலை ரெயில் நிலையம் வந்த சத்யபிரியாவை, தாம்பரம் சென்று கொண்டிருந்த மின்சார ரெயில் முன்பு தள்ளிவிட்டு கொலை செய்தார். இதனை தொடர்ந்து கைதான சதீஷ் பல முறை ஜாமினுக்கு முயன்றும் கிடைக்கவில்லை. இதனால் தொடர்ந்து சதீஷ் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு சென்னை அல்லிகுளத்தில் உள்ள மகளிர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீதேவி முன்பு விசாரணைக்கு வந்தபோது, சிபிசிஐடி காவல்துறை தரப்பில் 70 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டதாகவும், அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பை டிசம்பர் 27ஆம் தேதி அறிவிப்பதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்து இன்று இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி அறிவித்தார்.

சதீஷ் குற்றவாளி என தீர்ப்பு அளித்த நீதிபதி குற்றவாளி சதீஷுக்கான தண்டனை விவரம் 30ந்தேதி அறிவிக்கப்படும் என கூறினார்.

## பெண்ணை வெட்டிக்கொன்ற கள்ளக்காதலன்



நாகர்கோவில், டிச.29

அசாம் மாநிலம் திப்ருகாரில் இருந்து கன்னியாகுமரிக்கு தினமும் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த எக்ஸ்பிரஸ் ரெயில் தினமும் இரவு கன்னியாகுமரி ரெயில் நிலையத்தை வந்தடையும்.

நேற்று இரவு வழக்கம் போல் கன்னியாகுமரி ரெயில் நிலையத்திற்கு விவேக் எக்ஸ்பிரஸ் வந்து சேர்ந்தது. கன்னியாகுமரிக்கு சென்ற ரெயில் பராமரிப்பு பணிக்காக நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு இன்று காலை கொண்டு வரப்பட்டது.

ரெயில் நிலையத்தில் ஊழியர்கள் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது முன்பதிவு பெட்டியான எஸ்3, எஸ்4 பெட்டிகளில் உள்ளகழிவறையில் பராமரிப்பு பணியை மேற்கொண்டனர். அப்போது கழிவறையின் மேற்கூரையிலுள்ள ஸ்க்ரூக்கள் கழற்று இருந்தன.

அதை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். ஆனால் அந்த ஸ்க்ரூவை அவர்களால் மாட்ட முடியவில்லை. சந்தேகம் அடைந்த ஊழியர்கள் அந்த ஸ்க்ரூவை கழற்றி பார்த்தபோது மேற்கூரையில் சில பார்சல்கள் இருந்தன. ஒவ்வொரு பெட்டியிலும் 7 பார்சல் இருந்தது.

அதுகுறித்து ரெயில்வே ஊழியர்கள் ரெயில்வே போலீசாருக்கும், ரெயில்வே பாதுகாப்பு படை போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் ரெயில்வே இன்ஸ்பெக்டர்அருள்ஜெயபால், ரெயில்வே பாதுகாப்பு படை சப்இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து வந்து பார்த்தனர்.

அப்போது அந்த பார்சல்களில் கஞ்சா இருந்தது தெரியவந்தது. 14 பார்சல்களில் மொத்தம் 13 கிலோ கஞ்சா இருந்தது. போலீசார் அதை பறிமுதல் செய்தனர். அதை கடத்தி வந்தது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ரெயில் பெட்டியின் மேற்கூரையில் பாதுகாப்பாகமறைத்துவைத்து கஞ்சாவை கடத்தி வந்துள்ளனர்.

கடத்தி வந்த நபர் ரெயில்வேயில் போலீசார் ரோந்து பணியில் இருந்ததால் கஞ்சா பார்சலை எடுக்காமல் சென்று இருக்கலாம் என்று தெரிகிறது. கஞ்சா பார்சலை கடத்தி வந்தவர் யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பும் ரெயிலில் கடத்தி வரப்பட்ட 4 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த நிலையில் தற்போது 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ரெயிலில் 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது குறித்து போதைப்பொருள்தடுப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டு வருகி றார்கள்.

## 4 ஆண்டுகளில் பறிமுதல் செய்த ரூ.3.50 கோடி போதைப்பொருட்களை தீ வைத்து அழித்த போலீசார்



பல்லடம், டிச.29

திருப்பூர்மாவட்டம் பல்லடம் பகுதியில் போதைப்பொருட்கள் புழக்கத்தை தடுக்கும் வகையில் போலீசார் அதிரடி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கடைகள், குடோன்கள் உள்பட பல்வேறு இடங்களில் அவ்வப்போது சோதனை நடத்தி பதுக்கி வைக்கப்படும் குட்கா உள்ளிட்ட போதைப்பொருட்களை பறிமுதல் செய்து வருகின்றனர்.

மேலும் வாகன சோதனை நடத்தி வெளி மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்படும் போதைப்பொருட்களையும் பறிமுதல் செய்து போலீஸ் நிலையத்தில் இருப்பு வைத்திருந்தனர்.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் பல்லடம் போலீஸ் நிலையம் மூலம் ரூ.3.50 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்கள்பறிமுதல் செய்யப்பட்டன. அதனை போலீசார் தீ வைத்து அழித்தனர்.

## அரிசியில் உருவான 3 அங்குல உயர திருவள்ளுவர் சிலை ஆசிரியர் அசத்தல்



நெல்லை: டிச.29

உலகப் பொதுமறையாம் திருக்குறளை தந்த திருவள்ளுவருக்கு தமிழகத்தின் கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரி கடலில் 133 அடி உயரத்தில் சிலை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சிலை வடிவமைத்து 25 ஆண்டுகள் ஆகின்றது. இதனை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் திருவள்ளுவர் சிலைக்கு வெள்ளி விழா கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிலையில் நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி பகுதியை சேர்ந்த தனியார் பள்ளியில் பணியாற்றி வரும் ஓவிய ஆசிரியர் சரவணன் என்பவர் திருவள்ளுவருக்கு அரிசியில் சிலை செய்து அசத்தியுள்ளார்.

அதாவது, திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு அவரை பெருமைப்படுத்தும் விதமாகவும், தனது ஓவிய திறமை மூலமாகவும் அரிசிகளை கொண்டு சுமார் 3 அங்குலம் உயரத்தில் திருவள்ளுவர் சிலையை உருவாக்கியுள்ளார்.

## ரேசன் கடையில் இருந்து மூட்டை, மூட்டையாக அரிசிபொருட்கள் திருட்டு



திருவள்ளூர், டிச.29

திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து ரேசன் அரசி உள்ளிட்ட பொருட்கள் தொடர்ந்து ஆந்திர மாநிலத்திற்கு கடத்தப்படுவது அதிகரித்து உள்ளது. பஸ், ரெயில்களில் கடத்தப்படும் ரேசன் அரிசி மூட்டைகளை அவ்வப்போது அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகிறார்கள். இந்த நிலையில் ரேசன் கடையில் இருந்து இரவு நேரத்தில் மூட்டை, மூட்டையா ரேசன் அரசி கடத்தப்படும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. திருவள்ளூர் அடுத்த உளுந்தை கிராமத்தில் ரேசன் கடை உள்ளது. இந்த ரேசன் கடையில் இரவு நேரத்தில் கடையின் முன்பு காரை நிறுத்தி விட்டு ரேஷன் அரிசி உள்ளிட்ட பொருட்களை மூட்டை மூட்டையாக மர்ம நபர்கள் ஏற்றி செல்கிறார்கள். இதனை அவ்வழியே சென்ற ஒருவர் தனது செல்போனில் வீடியே எடுத்து வெளியிட்டு உள்ளார். தற்போது இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது. இரவு நேரத்தில் ரேசன்கடை பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக குறிப்பிட்ட ரேசன்கடை ஊழியரிடம் விசாரிக்க அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர். அந்த ரேசன் கடையில் பொதுமக்களுக்கு பொருட்கள் சரிவர வழங்குவதில்லை என்று அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

இந்த விவகாரத்தில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## கன்னியாகுமரி ரெயிலில் கடத்தி வரப்பட்ட 13 கிலோ கஞ்சா பறிமுதல்



நாகர்கோவில், டிச.29

அசாம் மாநிலம் திப்ருகாரில் இருந்து கன்னியாகுமரிக்கு தினமும் விவேக் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த எக்ஸ்பிரஸ் ரெயில் தினமும் இரவு கன்னியாகுமரி ரெயில் நிலையத்தை வந்தடையும்.

நேற்று இரவு வழக்கம் போல் கன்னியாகுமரி ரெயில் நிலையத்திற்கு விவேக் எக்ஸ்பிரஸ் வந்து சேர்ந்தது. கன்னியாகுமரிக்கு சென்ற ரெயில் பராமரிப்பு பணிக்காக நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு இன்று காலை கொண்டு வரப்பட்டது.

ரெயில் நிலையத்தில் ஊழியர்கள் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது முன்பதிவு பெட்டியான எஸ்3, எஸ்4 பெட்டிகளில் உள்ளகழிவறையில் பராமரிப்பு பணியை மேற்கொண்டனர். அப்போது கழிவறையின் மேற்கூரையிலுள்ள ஸ்க்ரூக்கள் கழற்று இருந்தன.

அதை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். ஆனால் அந்த ஸ்க்ரூவை அவர்களால் மாட்ட முடியவில்லை. சந்தேகம் அடைந்த ஊழியர்கள் அந்த ஸ்க்ரூவை கழற்றி பார்த்தபோது மேற்கூரையில் சில பார்சல்கள் இருந்தன. ஒவ்வொரு பெட்டியிலும் 7 பார்சல் இருந்தது.

அதுகுறித்து ரெயில்வே ஊழியர்கள் ரெயில்வே போலீசாருக்கும், ரெயில்வே பாதுகாப்பு படை போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் ரெயில்வே இன்ஸ்பெக்டர்அருள்ஜெயபால், ரெயில்வே பாதுகாப்பு படை சப்இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து வந்து பார்த்தனர்.

அப்போது அந்த பார்சல்களில் கஞ்சா இருந்தது தெரியவந்தது. 14 பார்சல்களில் மொத்தம் 13 கிலோ கஞ்சா இருந்தது. போலீசார் அதை பறிமுதல் செய்தனர். அதை கடத்தி வந்தது யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. ரெயில் பெட்டியின் மேற்கூரையில் பாதுகாப்பாகமறைத்துவைத்து கஞ்சாவை கடத்தி வந்துள்ளனர்.

கடத்தி வந்த நபர் ரெயில்வேயில் போலீசார் ரோந்து பணியில் இருந்ததால் கஞ்சா பார்சலை எடுக்காமல் சென்று இருக்கலாம் என்று தெரிகிறது. கஞ்சா பார்சலை கடத்தி வந்தவர் யார்? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பும் ரெயிலில் கடத்தி வரப்பட்ட 4 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த நிலையில் தற்போது 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ரெயிலில் 13 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது குறித்து போதைப்பொருள்தடுப்பு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் நாகர்கோவில் ரெயில் நிலையத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டு வருகி றார்கள்.

## அமெரிக்கா: கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் சோகம்; 4 பேர் பலி

நியூயார்க், டிச.29

அமெரிக்காவின் நியூஹாம்ப்ஷைர் மாகாணத்தில் வேக்பீல்டு நகரில் வீடு ஒன்றில் 4 பேர் பலியாகி கிடந்த அதிர்ச்சி சம்பவம் தெரிய வந்துள்ளது. இதுபற்றி தகவல் அறிந்த நியூஹாம்ப்ஷைர் மாகாண தீயணைப்பு துறை தலைவர் சீன் டூமீ கூறும்போது, போலீசாருக்கு இந்த சம்பவம் பற்றி தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக போலீசார் வந்து பார்த்தபோது, 4 பேரும் உயிரிழந்து கிடந்தனர். அவர்கள் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு வராத நிலையில், சந்தேகத்தின் பேரில் மற்ற குடும்ப உறுப்பினர்கள் போலீசாரைதொடர்புகொண்டு இதுபற்றி விசாரிக்க கோரியுள்ளனர்.

இதில், அவர்கள் 4 பேரும் பலியாகி கிடந்தது தெரிய வந்தது. அவர்களில் 2 பேர் வயது முதிர்ந்தவர்கள் ஆவர். தற்செயலாக நடந்த சம்பவத்தில் இவர்கள் உயிரிழந்து இருக்க கூடும் என அதிகாரிகள் நம்புகின்றனர். குளிர்காலத்தில் வெப்பநிலை வெகுவாக குறைந்து உள்ளது. இதனால், வெப்பமூட்டும் சாதனங்களை அவர்கள் பயன்படுத்தியபோது, அதில் இருந்து கார்பன் மோனாக்சைடு விஷ வாயு கசிந்து அவர்கள் பலியாகி இருக்க கூடும் என்று கூறப்படுகிறது.

எனினும், உயிரிழந்தவர்களின் பெயர் உள்ளிட்ட விவரங்களை போலீசார் வெளியிடவில்லை. அவர்களின் பிரேத பரிசோதனை முடிவிலேயே உண்மையான காரணம் என்னவென்று தெரிய வரும்.

# இறச்சகுளம் அருகே பொதுமக்கள் சாலை மறியல் அரசு பஸ்கள் சிறைபிடிப்பு



பூதப்பாண்டி, டிச.29

பூதப்பாண்டி அருகே பேச்சாங்குளம் பகுதியில் வேம்படிகுளம் உள்ளது. இந்த குளத்தின் இரு கரைகளிலும் சுடுகாடு, இடுகாடு உள்ளது. இதில் சுடுகாடு அரசு கட்டிக் கொடுத்துள்ளது. இந்த நிலையில் அந்த பகுதியில் தனியார் ஒருவர் தென்னந்தோப்பு ஒன்றை வாங்கி உள்ளார். அந்த தென்னந்தோப்பிற்கு செல்வதற்கு பாதை வசதி இல்லை என்று தெரிகிறது. இது தொடர்பாக அவர் தோவாளை தாசில்தாரிடம் புகார் கொடுத்தார்.

இதையடுத்து அந்த பகுதியில் சுடுகாடு, இடுகாடு மக்கள் பயன்படுத்தக்கூடாது என்று அறிவிப்பு பலகை வைத்துள்ளார். இதை கண்டித்து அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பேச்சாங்குளம் பகுதியில் திரண்டனர்.

திடீரென நாகர்கோவில் இறச்சகுளம் சாலையில் பேச்சாங்குளம் பகுதியில் ஊர் தலைவர் கார்த்திக் தலைமையில் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இறச்சகுளம் ஊராட்சி தலைவர் நீலகண்ட ஜெகதீஷ், துணை தலைவர் மனோ சிவா, மீனவ கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர்சகாயம், தி.மு.க. தொழிலாளர் அணி அமைப்பாளர் இ.என்.சங்கர் மற்றும் 100க்கும் மேற்பட்ட பெண்களும், ஆண்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த வழியாக வந்த அரசு பஸ்கள் சிறைபிடிக்கப்பட்டது. சாலையின் இருபுறமும் பஸ்கள் சிறைபிடிக்கப்பட்டதால் பொதுமக்கள் பரிதவிப்பிற்கு ஆளானார்கள். காலை நேரம் என்பதால் பள்ளி செல்லும் மாணவ மாணவிகளும் பாதிக்கப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் நாகர்கோவில் ஏ.டி.எஸ்.பி. லலித்குமார், இன்ஸ்பெக்டர் முத்துராஜ் ஆகியோர் போலீசார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட அதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து உறுதி அளிக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து தோவாளை தாசில்தார் கோலப்பன் சம்பவ இடத்திற்கு வந்து பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார். அந்த பகுதியில் வைக்கப்பட்டு இருந்த பிளக்ஸ் போர்டு அகற்றப்படும் என்று அவர் உறுதி அளித்தார். இதையடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதைத்தொடர்ந்து சிறைபிடிக்கப்பட்ட பஸ்கள் அங்கிருந்து விடுவிக்கப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கு பிறகு போக்குவரத்தும் சீரானது. பின்னர் அந்த பகுதியில் வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் போர்டை அதிகாரிகள் அகற்றினர்.

# மாணவிக்கு நேர்ந்த கொடுஞ்செயலுக்கு பின்னால் திமுக நிர்வாகிகள்: எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, டிச.29

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனி சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சமுதாயத்தை சீரழிக்கும், அனைத்து விதமான குற்றச் செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகளின் கூடாரமாக ஆளும் திமுக திகழ்கிறது என்பதற்கு அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் நடந்தேறிய பாலியல் சம்பவமே சான்றாக அமைந்துள்ளது. மாணவியை சீரழித்தாக கைதான சரித்திர பதிவேடு குற்றவாளி ஞானசேகரன் என்ற காமக்கொடூரன் ,திமுக உறுப்பினர் என்று செய்திகள் வருகின்றன.

துணைமுதல்அமைச்சர், மருத்துவத்துறை அமைச்சர் ஆகியோருடன் எடுத்த புகைப்படங்கள் செய்திகளில் வருகின்றன,சமூக வலைதளங்களிலும் வலம் வருகின்றன. தமிழ்நாட்டின்மிக முக்கியமான பல்கலைக்கழகத்தில் சிசிடிவி செயல்பாட்டில் இல்லை என்பதை எப்படி நம்புவது?

அண்ணா பல்கலைக்கழகத்தில் சிசிடிவி வேலை செய்யவில்லை என்று மு.க.ஸ்டாலின் மாடல் அரசு சொல்வது "சர்க்கரையை எறும்பு தின்றது, சாக்கு பையை கரையான் தின்று விட்டது" என சொல்வது போலிருக்கிறது. அந்த அளவிற்கு பாதுகாப்பு குறைபாட்டுடன்தான் அண்ணா பல்கலைக்கழகத்தை நடத்தி வருகிறதா திமுக அரசு?. பல வழக்குகளில் தொடர்புடைய ஞானசேகரன் பல்கலைக் கழக வளாகத்துக்குள் எப்படி அனுமதிக்கப் பட்டான்?.

பல்கலைகழகங்களை உயர் கல்வி பயிலும் பாடசாலைகளாக நடத்துவதற்கு பதில், பாலியல் குற்றவாளிகளின் கூடாரமாக இந்த அவல ஆட்சியும் அதை நடத்தும் கட்சியினரும் மாற்றி வைத்திருப்பது உலகக் கொடுமைகளின் உச்சம். ஒருடுவீட்போட்டு கருத்து சொல்லுபவர்களை தேடி தேடி கைது செய்யும் காவல்துறை ஏற்கனவே பல வழக்கில் தொடர்புடைய ஞானசேகரனை கைது செய்யாதது ஏன்? ஆளுங்கட்சியான திமுகவை சேர்ந்தவர் என்பதாலா?.

போதைப்பொருள்புழக்கம், கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை என எல்லா கொடுஞ்செயலுக்கும் பின்னால் திமுக நிர்வாகிகள் இருப்பது என்பது, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் மாடல் திமுக அரசுதான் குற்றவாளிகளை ஊக்குவித்தும், காப்பாற்றவும் செய்கிறதோ என்ற சந்தேகத்தை மக்களிடையே வலுவாகஎழுப்பியுள்ளது.

அண்ணாநகர் சிறுமி பாலியல் வழக்கில் சென்னை ஐகோர்ட்டே தானாக முன்வந்து மாநில காவல் துறை விசாரணை போதாது என்று சிபிஐயை விசாரிக்க உத்தரவிட்டது, சிபிஐ விசாரணை வேண்டாம் என்று சுப்ரீம் கோர்ட்டில் முறையிட்டீர்கள். ஒரு பாலியல் குற்றவாளிக்கு ஆதரவாக அரசாங்கமே சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று உறுதுணையாக இருக்குமானால், பாலியல் குற்றங்கள் புரிபவர்க்கு இந்த அரசின் மீது எப்படி அச்சம் வரும்?

இதுதான் உண்மை என்றால், உங்களிடம் சட்டம் ஒழுங்கைக் காக்கக் கோரி வலியுறுத்துவதில் எந்தப் பயனும் இல்லை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே. அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமையினை எளிதில் கடந்துவிடலாம் என்ற எண்ணத்தில் இருந்தால், அதனை இப்போதே கைவிட்டு விடுங்கள் மாணவர்கள் அச்சத்தில் உள்ளனர்; அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

அதிமுக சார்பாக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு முன் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி போராட்டம் நடந்த போரட்டதில் , மக்களுக்காக போராடிய அதிமுக நிர்வாகிகளையும், தொண்டர்களையும் , ஸ்டாலினின் திமுக அரசாங்கம் அடக்குமுறைக்கு ஆளாக்கி கைது செய்ததற்கு எனது கடும் கண்டனங்கள். பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பது இது தானோ?. இந்த திமுக ஆட்சியின் அலட்சியத்தால் ,தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இனி இந்த திமுக அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் ஒன்றே, தமிழ்நாட்டை காப்பதற்காண ஒரே வழி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலூரில் மின்சாரம் தாக்கி இளைஞர்கள் உயிரிழப்பு




வேலூர், டிச.29

வேலூர் மாவட்டம் மேல்வல்லம் பகுதியில் புதிய வீட்டின் மொட்டை மாடியில் சீலிங் வேலை நடந்து கொண்டிருந்தது. ஸ்டீல் கைப்பிடியை பொருத்தும் பணியில் காகிதப்பட்டறையைச் சேர்ந்த 2 இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கைப்பிடியை பொருத்தும் பணியின்போது அவர்களுக்கு மின்சாரம் தாக்கியது. இதில் சம்பவ இடத்திலேயே அவர்கள் உயிரிழந்தனர்.

ஸ்டீல் கம்பி எதிரே உள்ள மின்கம்பியில் உரசியதில் அவர்கள் மீது மின்சாரம் பாய்ந்துள்ளது. இதில் முகேஷ் (24), சதீஷ் (24) பலியாகினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொடைக்கானலில் கடும் பனி மூட்டத்துடன் உறைபனி நிலவுவதால் சுற்றுலா பயணிகள் உற்சாகம்



கொடைக்கானல், டிச.29

மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் தற்போது உறை பனி சீசன் நிலவி வருகிறது. கொடைக்கானலில் மாறுபட்ட சீதோஷ்ணம் நிலவி வருவதால் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகை தருவது வழக்கம்.

கடந்த சில நாட்களாக கொடைக்கானலில் குறைந்தபட்ச வெப்பநிலையாக 5 டிகிரி செல்சியஸ் மட்டுமே காணப்படுகிறது. மேலும் நகர் முழுவதும் கடும் பனி மூட்டம் நிலவி வருவதால் பகலிலும் வாகனங்கள்முகப்புவிளக்குகளை எரிய விட்டபடி செல்கின்றன.

ஓங்கி உயர்ந்த மலை உச்சி கூட தெரியாத அளவுக்கு பனி மூட்டம் காணப்படுகிறது. நேற்று மாலை முதல் விட்டு விட்டு சாரல் மழையும் பெய்து வருகிறது. அரையாண்டு விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறைக்காக கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வந்து குவிந்துள்ளனர்.

இதனால் நகர் முழுவதும் அனைத்து சுற்றுலா தலங்களிலும் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. ஏரியில் பனிமூட்டத்துக்கு நடுவே படகு சவாரி செய்தும், ஏரிச்சாலையில் குதிரை சவாரி, சைக்கிள் சவாரி செய்தும் மகிழ்ந்து வருகின்றனர்.புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக பல்வேறு விடுதிகளில் விதவிதமான கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேக்கேஜ் டூரில் கொடைக்கானல் வந்துள்ள சுற்றுலா பயணிகள் அங்கு தங்கி புத்தாண்டை வரவேற்க தயாராகி வருகின்றனர். இங்கு சாரல் மழை, பனி மூட்டம், உறை பனி என காஷ்மீர்போன்றசீதோஷ்ணம் காணப்படுவதால் அதனை சுற்றுலா பயணிகள் உற்சாகத்துடன் ரசித்து வருகின்றனர்.

மேலும் வரும் நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்க கூடும் என்பதால் கொடைக்கானலில் சுற்றுலா தொழிலை நம்பியுள்ள வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# ஆழ்வார் திருநகரில் ஆளை விழுங்கும் பள்ளம்: வாகன ஓட்டிகள் தடுமாற்றம்



சென்னை, டிச.29

சென்னை ஆழ்வார் திருநகர் பகுதியில் குடிநீருக்காக நடுரோட்டில் தோண்டப்பட்ட பள்ளம் நீண்ட நாட்களாக மூடப்படாமல் திறந்தே கிடப்பதால் அப்பகுதியில் அசம்பாவித சம்பவங்கள் அரங்கேறும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆழ்வார் திருநகர், சரஸ்வதி நகர் 4வது தெரு சந்திப்பில் கடந்த சில நாட்களுக்கு முன்பு புதிதாக குடிநீர்இணைப்புகொடுப்பதற்கு பள்ளம் தோண்டப்பட்டது. இதன் பின்னர் இணைப்புக்கான சோதனை ஓட்டம் நடைபெற்றது. ஆனால் சரியான முறையில் குடிநீர் குழாய்களில் தண்ணீர் செல்லாத காரணத்தால் பெரிய பள்ளம் தோண்டப்பட்டது. சுமார் 6 அடி ஆழமுள்ள இந்த பள்ளத்தை தோண்டி சில நாட்கள் வேலை செய்தனர். இதன் பிறகு இந்த பள்ளத்தை அப்படியே போட்டுவிட்டு ஊழியர்கள் சென்று விட்டனர்.

இதன்காரணமாக அங்கு வசித்து வரும் ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிள் செல்லும் அளவுக்கே அந்த சாலையில் தற்போது இடம் உள்ளது. சிறுவர், சிறுமிகளும் சைக்கிளில் வெளியில் செல்கிறார்கள்.

அவர்கள் பல நேரங்களில் பள்ளத்தையொட்டி குவிந்து கிடக்கும் மணல் மேட்டில் சிக்கி கீழே விழும் நிலையும் ஏற்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக பலமுறை புகார் அளிக்கப்பட்டும் பள்ளத்தை மூடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஆளை விழுங்கும் அளவுக்கு உள்ள ஆபத்தான பள்ளத்தை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதே போன்று சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் சாலைகளில் பள்ளம் தோண்டப்பட்டு முறையாக மூடப்படாமலேயே உள்ளது.

இதன் காரணமாக வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிப்பட்டு வருகிறார்கள். கேபிள் மற்றும் குடிநீர் குழாய் பதிப்பதற்காக பல இடங்களில் தோண்டப்பட்ட பள்ளங்கள் விபத்துகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் எந்தெந்த பகுதிகளில் தோண்டப்பட்ட பள்ளங்களால் சாலைகள் பழுதாகி கிடக்கின்றன என்பதை கண்டுபிடித்து உடனடியாக அவைகளையும் ஒழுங்காக மூடி சரி செய்ய வேண்டும் என்பதே வாகன ஓட்டிகளின் விருப்பமாக உள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி ஆழ்வார் திருநகர் போன்று பல்வேறு இடங்களிலும் திறந்து கிடக்கும் பள்ளங்களை மூடுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# தேனி அருகே காரும் வேனும் நேருக்கு நேர் மோதி விபத்து 3 பேர் உயிரிழப்பு



தேவதானப்பட்டி, டிச.29

கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த ஜெயின் தாமஸ் என்பவர் ஒரு காரில் 4 பேருடன் திண்டுக்கல் வந்து விட்டு மீண்டும் தனது சொந்த ஊருக்கு சென்று கொண்டு இருந்தார். தேனி அருகே உள்ள பொம்மனம்பட்டியைச் சேர்ந்த 4 குடும்பத்தினர் ஒரு வேனில் ஏற்காடுக்கு சுற்றுலா செல்ல முடிவு செய்தனர்.

அதன்படி அவர்கள் தங்கள் வேனில் தேனியில் இருந்து பெரியகுளம் நோக்கி வந்து கொண்டு இருந்தனர். இன்று அதிகாலை 4 மணியளவில் தேவதானப்பட்டி காட்ரோடு பகுதியில் சுற்றுலா வேனும் காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் பயங்கரமாக மோதியது.

கடும் பனி மூட்டம் நிலவியதால் இந்த விபத்து நடந்திருக்கலாம் என அப்பகுதியில் இருந்தவர்கள் சந்தேகமடைந்தனர்.

பின்னர் அவர்களின் கூக்குரலை தொடர்ந்து அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தனர்.

இதுகுறித்து தேவதானப்பட்டி போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் காரில் வந்த ஜெயின் தாமஸ் உள்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர். வேனை ஓட்டி வந்த தேனி அல்லிநகரத்தைச் சேர்ந்த பிரசாத் (28) உள்பட 18 பேரும் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு தேனி, பெரியகுளம், வத்தலக்குண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் பலியான 3 பேரின் உடல்களையும் மீட்டு தேனி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் சிக்கிய காரும், வேனும் அப்பளம் போல் நொறுங்கி சாலையோரம் கிடந்தது. அதனை போலீசார் அகற்றி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். விபத்தில் இறந்த மற்ற 2 பேர் குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர். அதிகாலை நடந்த இந்த விபத்தால் அப்பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

# பேயை விரட்டுவதாகக் கூறி இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை போதகர் கைது



போலீசார் கெனித்ராஜை கைது செய்து சிறையில் அடைத்தனர். கெனித்ராஜ் மீது பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சென்னை, டிச.29

சென்னை ராஜா அண்ணாமலைபுரம் பகுதியில் வசித்து வருபவர் கெனித் ராஜ். 47 வயதான இவர் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றில் போதகராக உள்ளார்.

கெனித் ராஜிடம் அதே பகுதியை சேர்ந்த திருமணமான 26 வயது இளம் பெண் மன உளைச்சலில் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார். இதையடுத்து போதகர் கெனித் ராஜ் 'உனக்கு பேய் பிடித்துள்ளது எனது வீட்டுக்கு வா', நான் பேயை ஓட்டுகிறேன் என்று கூறியுள்ளார்.

இதை நம்பி கெனித் ராஜின் வீட்டுக்கு சென்ற பெண்ணிடம் அவர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு உள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெண், போதகரை தள்ளி விட்டு விட்டு வெளியில் ஓடி வந்துள்ளார். அப்போது போதகர் கெனித் ராஜ் தான் சொல்கிறபடி கேட்காவிட்டால் உனது கணவன் மற்றும் குழந்தைகளை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதனால் பயந்து போன பெண், மயிலாப்பூர் மகளிர்போலீசில் புகார்அளித்தார். போலீசார்வழக்குப்பதிவு விசாரணை நடத்தி

# மாநகர பஸ்கள் இனி, சிக்னலில் காத்திருக்க தேவையில்லை



சென்னை, டிச.29

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் உள்ள சிக்னல்களில், மாநகர பஸ்கள் அதிக நேரம் நிற்பதை தவிர்க்கும் வகையில் சென்னை ஐ.ஐ.டி, திருவனந்தபுரத்தைச் சேர்ந்த சி.டி.ஏ.சி. மையம் சார்பில் 'பஸ் சிக்னல் முன்னுரிமை' என்ற திட்டம் சோதனை முயற்சியாக செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் படி, சிக்னல் அருகே மாநகர பஸ்கள் நிற்கும்போது பச்சை விளக்குகள் கூடுதல் நேரம் ஒளிரும் வகையில் சிக்னல்களில் மாற்றம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து நெரிசலில் பஸ்கள் அதிக நேரம் காத்திருக்கும் நிலை குறையும். மேலும் எரிபொருள் செலவை குறைக்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்துக்காக ஜி.எஸ்.டி. சாலையில், ஆலந்தூர் முதல் சென்னை விமான நிலையம் வரையிலான வழித்தடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் உள்ள சிக்னல்களிலும், மாநகர பஸ்களிலும் தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் வகையில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்படவுள்ளன. சிவப்பு விளக்கு எரியும் சிக்னலை மாநகர பஸ் அடையும்போது, ஜி.பி.எஸ். சிக்னலை போக்குவரத்து சிக்னல்கள் அடையாளம் கண்டு கொள்ளும். பின்னர் பஸ்சுக்கு வழிவிடும் வகையில் சிக்னலில் தானாகவே பச்சை விளக்கு எரியும். இதன் மூலம் பஸ்கள் தேவையில்லாமல் நீண்ட நேரம் சிக்னலில் காத்திருக்க தேவையிருக்காது. பொதுமக்களும் பொதுப் போக்குவரத்தை அதிகம் பயன்படுத்தும் சூழல் ஏற்படும். இதைக் கண்காணிக்க மாநகர போக்குவரத்து கழகம், போக்குவரத்து காவல்துறை சார்பில் ஆய்வுக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்காக தமிழக அரசு, போக்குவரத்து துறை மற்றும் சென்னை ஐ.ஐ.டி. சார்பில் ரூ. 82 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாத இறுதியில் இந்தத் திட்டத்துக்கான சோதனைமுயற்சிதொடங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவி வன்கொடுமை விவகாரம்: அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும்: அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, டிச.29

பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடர் குற்றவாளி ஒருவனால் பொறியியல் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வெளியான செய்தியால் ஏற்பட்ட அதிர்ச்சி விலகுவதற்கு முன்பாக, அந்த மாணவியின் பெயர், ஊர் உள்ளிட்ட அடையாளங்களுடன் கூடிய வழக்கின் முதல் தகவல் அறிக்கை வெளியில் கசியவிடப்பட்டிருப்பது வேதனையளிக்கிறது. காவல்துறையின் இந்த பொறுப்பற்ற செயல் கண்டிக்கத்தக்கது.



மாணவியை இரக்கமற்ற மனித மிருகம் உடல்ரீதியாக வன்கொடுமை செய்தால், காவல்துறையோ மனரீதியாக வன்கொடுமை செய்திருக்கிறது. பாலியல் வன்கொடுமை சார்ந்த வழக்குகளில் எத்தகைய நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்ற அடிப்படைக்கூட தெரியாத அதிகாரிகளால் கையாளப்படும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைக்குமா? என்ற ஐயத்தை இந்த நிகழ்வு ஏற்படுத்தியிருக்கிறது.

பாலியல் வன்கொடுமை வழக்கில் இருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்படும் நிலையில், கைது செய்யப்பட்ட ஒருவரைத் தவிர இன்னொருவர் யார்? என்று தெரியவில்லை. அவரை பாதுகாக்கும் நோக்கத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணை மனதளவில் சோர்ந்து போகச் செய்யும் நோக்குடன் தான் காவல்துறை இவ்வாறு செய்கிறதா? என்ற ஐயம் எழுகிறது.

பாதிக்கப்பட்ட மாணவியின் அடையாளங்களை முதல் தகவல் அறிக்கை வாயிலாக வெளியிட்ட காவல்துறை அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது பணியிடைநீக்கம் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து சட்டப்படி தண்டனைப் பெற்றுத்தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடுமலை மத்திய பஸ் நிலையத்தில் இளம்பெண்களிடம் அத்துமீறிய போதை ஆசாமியால் பரபரப்பு

உடுமலை, டிச.29

திருப்பூர் மாவட்டம் உடுமலை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சுற்றுப்புற கிராமங்கள், வெளியூர், வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு நாள்தோறும் அரசு மற்றும் தனியார் பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பஸ் நிலையம் காலை முதல் இரவு வரை பரபரப்பாக காணப்படும்.



இந்தநிலையில் அங்கு வந்த போதை ஆசாமி ஒருவர் பஸ்சுக்காக காத்திருந்த இளம்பெண்களிடம் தகராறு செய்ததோடு அத்துமீறியதாக தெரிகிறது. ஒரு கட்டத்தில் அவரது அராஜகம் அதிகமாகவே வேறு வழி இல்லாமல் ஓட்டுனர் மற்றும் நடத்துனர்கள் இணைந்து போதை ஆசாமியை பிடித்து உடுமலை புறக்காவல் நிலையத்துக்கு அருகே உள்ள கண்காணிப்பு கேமரா அறையில் அடைத்தனர்.

இதனால் ஆவேசம் அடைந்த போதை ஆசாமி அறைக்குள் இருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகள் பதிவாகும் டி.வி.யை உடைத்ததுடன் மது பாட்டில்களையும் உடைத்து வீசியதாக தெரிகிறது.

இதையடுத்து அங்கு வந்த உடுமலை போலீசார் போதை ஆசாமியை போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தனர். இந்த சம்பவத்தால் உடுமலை மத்திய பஸ் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு தயாராகும் நட்சத்திர ஓட்டல்கள்

மாமல்லபுரம், டிச.29

ஜனவரி 1ந்தேதி ஆங்கில புத்தாண்டு உலகம் முழுவதும் விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. 31ந்தேதி நள்ளிரவு ஓட்டல்கள், கடற்கரை, ரிசாட்டுகளில் உற்சாகம் களைகட்டும். புத்தாண்டுக்கு இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில் மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் கடற்கரை ரிசார்ட்டுகள் கொண்டாட்டங்களுக்கு தயாராகி வருகிறது.

விருந்தினர்களை மகிழ்ச்சி படுத்த பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய உணவுகள், பழங்களில் தயாரித்த பிரத்தியேக ஒயின் வகைகள், மது மற்றும் உழர் பழத்திலான கேக் வகைகள், விளையாட்டு போட்டிகள், டிஜே உள்ளிட்ட பல்வேறு நிகழ்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்து உள்ளன. இதற்கான முன்பதிவு டிக்கெட்டுகள் ஏற்கனவே ஆரம்பமாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனை போட்டி போட்டு இளைஞர்களும், இளம் பெண்களும் முன்பதிவு செய்து வருகிறார்கள்.



இதையடுத்து புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு போலீசார் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து உள்ளனர். நிகழ்ச்சிகள் அனைத்தும் சட்ட விதிமுறைகள்படி அனுமதி பெற்றுதான் நடத்த வேண்டும், ஏற்பாடுகள் குறித்து பகுதி போலீஸ் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும், நள்ளிரவு 12:30க்குள் நிகழ்ச்சிகளை முடித்து விட வேண்டும் என்று தெரிவித்து உள்ளனர். மேலும் முட்டுக்காடு, கோவளம், திருவிடந்தை, மாமல்லபுரம், பூஞ்சேரி, வெங்கம்பாக்கம் என 6 இடங்களில் போலீஸ் சோதனை சாவடிகள் அமைத்து தீவிரமாக கண்கானிக்க போலீசார் முடிவு செய்து உள்ளனர்.

இந்த நிலையில் ஓட்டல்களில் மது விருந்து நடைமுறைகள் குறித்து நேற்று மாமல்லபுரம் மதுவிலக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் மங்களபிரியா தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு நட்சத்திர ஓட்டல்கள், ரிசாட்டுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அப்போது பார் லைசென்சு வைத்திருப்போர் தடை செய்யப்பட்ட வெளிமாநில, வெளிநாட்டு மது வகைகளை பரிமாற கூடாது, தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் வழங்கக்கூடாது. அப்படி எவரேனும் பயன்படுத்தி வந்தால் அனுமதிக்கக்கூடாது. உடனடியாக போலீசுக்கு தகவல் தர வேண்டும். பார் அனுமதி இல்லாத உணவகங்களில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்தால் சீல் வைக்கப்படும். அடுத்து கைது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற போலீசார் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள ஓட்டல்களில் புத்தாண்டு கொண்டாட்ட ஏற்பாடுகள் களைகட்ட தொடங்கி உள்ளன.

# இறுதி வாக்காளர் பட்டியல் ஜனவரி 6ந்தேதி வெளியாகிறது

சென்னை, டிச.29

இந்திய தேர்தல் ஆணையம், அடுத்த ஆண்டு ஜனவரி 1ந்தேதியை தகுதி யேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை அறிவித்தது. அதன்படி, கடந்த ஆகஸ்டு 20ந்தேதி முதல் அக்டோபர் 18ந்தேதி வரைவாக்காளர்பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டனர்.

அதன் பிறகு, அக்டோபர் 29ந்தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு, அன்று முதல் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்துக்கான விண்ணப்பங்கள் நவம்பர் 28ந்தேதி வரை பெறப்பட்டது. இந்த காலகட்டத்தில் கடந்த நவம்பர் 16, 17 மற்றும் 23, 24 ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் உள்ள 69 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த 4 நாட்கள் முகாமிலும், பெயர் சேர்க்க 8,38,016 விண்ணப்பங்கள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க4விண்ணப்பங்கள், ஆதார் இணைப்புக்கு 783 விண்ணப்பங்கள், பெயர் நீக்கம் செய்ய 1,19,701 விண்ணப்பங்கள், திருத்தம்மேற்கொள்ள4,42,111 விண்ணப்பங்கள் என மொத்தம் 14 லட்சத்து 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதுதவிர, தாலுகா அலுவலகங்களில் வாக்காளர் பட்டியல் பதிவு அதிகாரிகளிடம் நேரிலும், ஆன்லைன் மூலமும்விண்ணப்பங்கள் பெறப்பட்டன.



அந்த வகையில் கடந்த அக்டோபர் 29 முதல் நவம்பர் 28ந்தேதி வரை சிறப்பு முகாம்கள் மற்றும் நேரில் 17 லட்சத்து 70 ஆயிரத்து 901 விண்ணப்பங்கள், ஆன்லைன் வாயிலாக 5 லட்சத்து 38 ஆயிரத்து 490 விண்ணப்பங்கள் என மொத்தம் 23 லட்சத்து 9 ஆயிரத்து 391 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில், பெயர் சேர்க்க மட்டும் ஆன்லைனில் 1,08,872 விண்ணப்பங்கள், நேரடியாக 9,22,372 விண்ணப்பங்கள், பெயர் நீக்க ஆன்லைனில் 2,69,200 விண்ணப்பங்கள், நேரடியாக 2,81,915 விண்ணப்பங்கள், முகவரி மாற்றம், திருத்தம் செய்ய ஆன்லைனில் 1,60,372 விண்ணப்பங்கள், நேரடியாக 5,66,605 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்களின் பரிசீலனை நவம்பர் 29 ந்தேதி முதல் கடந்த 24 ந்தேதி வரை நடைபெற்றது. இதையடுத்து தற்போது இறுதி வாக்காளர் பட்டியல் தயாரிப்பு பணிகள் தொடங்கியுள்ளன. வருகிற ஜனவரி 6ந்தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அதன்பின் புதிய வாக்காளர்களுக்கு, தேசிய வாக்காளர் தினமான ஜனவரி 25ந்தேதி முதல் புதிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

# நவீன் பொலிஷெட்டி படத்தில் இருந்து ஸ்ரீலீலா விலகல்...புதிய கதாநாயகி அறிவிப்பு



தெலுங்கு சினிமாவில் இளம் நடிகராக வலம் வருபவர் நவீன் பொலிஷெட்டி. இவர் தொடர்ந்து 3 வெற்றிப்படங்களை கொடுத்து சாதனை படைத்து, தற்போது உள்ள இயக்குனர்களால் மிகவும் விரும்பப்படும் நடிகராக மாறியுள்ளார்.

இவருக்கு சமீபத்தில் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதன் காரணமாக நடிப்பில் இருந்து விலகி ஓய்வெடுத்து வந்தார். தற்போது அதிலிருந்து குணமாகியுள்ள நவீன் பொலிஷெட்டி, தயாரிப்பாளர் நாக வம்சி தயாரிக்கும் 'அனகனக ஒக ராஜு' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை அறிமுக இயக்குனர் மாரி இயக்குகிறார். இப்படத்தில் நடிகை ஸ்ரீலீலா கதாநாயகியாக நடிக்க இருந்தார். ஆனால், இப்படத்தின் படப்பிடிப்புக்கான கால அட்டவணைகொடுப்பதில்சிக்கல்ஏற்பட்டகாரணத்தால்அவர்விலகியதாககூறப்படுகிறது. இந்நிலையில், டீசர் ஒன்றை வெளியிட்டு புதிய கதாநாயகியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, மீனாட்சி சவுத்ரி இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். இவர் இதற்கு முன்பு துல்கர் சல்மான் நடிப்பில் வெளியான 'லக்கி பாஸ்கர்' படத்தில் நடித்திருந்தார்.

# 'ஓ.டி.டிக்கு தேவை நடிகர்கள்தான் நட்சத்திரங்கள் அல்ல' பாலிவுட் நடிகர் பரபரப்பு பேச்சு



பிரபல பாலிவுட் நடிகர் கே கே மேனன். இவர் 'பிளாக் பிரைடே', 'தீவர்', 'சர்க்கார்', 'குலால்', 'ஹைதர்', 'பேபி' போன்ற படங்களில் நடித்து பிரபலமானார். மேலும், ஓ.டி.டியில் வெளியானஸ்பெஷல் ஆப்ஸ், பார்ஸி, தி ரெயில்வே மென் மற்றும் சிட்டாடல்: ஹனி பன்னி போன்ற வெப் தொடர்களிலும் நடித்திருக்கிறார்.

இவர் தனது படங்களை விட ஓ.டி.டியில் வெளியான வெப் தொடர்களின் மூலமே பரவலாக பேசப்படுகிறார். இந்நிலையில் நடிகர் கே கே மேனன் 'ஓ.டி.டிக்கு நடிகர்கள்தான் தேவை நட்சத்திரங்கள் இல்லை என்று பரபரப்பாக பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

'30 வருடங்களாக சினிமா துறையில் இருக்கும் எனக்கு, ஒரு பிளாக்பஸ்டர் படத்திலோ அல்லது வேறுவிதமான படத்திலோ நடிக்காமல் இருப்பது ஒரு நடிகனாக என் மதிப்பை குறைத்துவிடும் என்று நினைத்ததில்லை.

நான் சினிமாவுக்கு வந்த முதல் ஐந்து ஆண்டுகளில், இந்த எண்ணம் என் மனதில் தோன்றியிருக்கலாம். ஆனால், இப்போதுதிரைப்படங்களில்நடிக்கும்நட்சத்திரங்களுக்குஇணையாகஓ.டி.டியின்மூலம்எனக்குபாராட்டுகிடைக்கிறது. அதற்கு நடிகராக இருந்தால் போதும் நட்சத்திரமாக இருக்க வேண்டியதில்லை' என்றார்.

# வைரலாகும் 'ஹிட் 3' படத்தின் புதிய போஸ்டர்




தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. சமீபத்தில், இவர்நடிப்பில் வெளியானபடம் 'சூர்யாவின்சனிக்கிழமை'. பிரியங்காமோகன் கதாநாயகியாக நடித்திருந்த இப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சனரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த படத்தை தொடர்ந்து நானி, 'கோர்ட்' மற்றும் 'ஹிட் 3' ஆகிய 2 படங்களில் ஒப்பந்தம் ஆகியுள்ளார். இதில் ஹிட் 3 படத்தை பிரபல இயக்குனர் சைலேஷ் கொலானு இயக்குகிறார். பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகும் இப்படம் அடுத்த ஆண்டு மே மாதம் 1ம் தேதி திரைக்கு வருகிறது.

கிரைம் திரில்லர் ஜானரில் தயாராகி வரும் 'ஹிட் 3' படத்தின் படப்பிடிப்பு தற்போது ஐதராபாத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில், இப்படத்தின் படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த போஸ்டரில் நடிகர் நானி குதிரையுடன் பனி நிறைந்த ஒரு இடத்தில் இருக்கிறார். இது தற்போது

# அடுத்த படம்...இந்த நடிகருக்கு ஜோடியாகிறாரா சாய்பல்லவி?

பிரேமம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சாய் பல்லவி. இதில் இவர் நடித்த 'மலர் டீச்சர்' கதாபாத்திரம் ஏராளமான ரசிகர்களை கவர்ந்தது. முதல் படத்திலேயே இவருக்கு சிறந்த நடிகை என்று பெயர் கிடைத்ததை தொடர்ந்து தமிழ் படத்தில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தன. சமீபத்தில், சிவகார்த்திகேயனுடன் 'அமரன்' திரைப்படத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பாராட்டை பெற்றார். தற்போது இவர் நாக சைதன்யாவுடன் 'தண்டேல்' படத்திலும், பாலிவுட்டில் 'ராமாயணம்' படத்திலும் நடித்து வருகிறார். இந்நிலையில், சாய்பல்லவியின் அடுத்த படம் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பிரபல இயக்குனர் வேணு யெல்டாண்டி இயக்கும் 'எல்லம்மா' படத்தில் நடிகர் நித்தினுக்கு ஜோடியாக சாய்பல்லவி நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் என்றும் இறுதியில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது. விரைவில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாக்சிங் டே டெஸ்ட்: சுப்மன் கில் நீக்கப்பட்டது ஏன்..? துணை பயிற்சியாளர் விளக்கம்



இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்ன் மைதானத்தில் நேற்று தொடங்கியது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் தொடங்கும் இந்த போட்டி 'பாக்சிங் டே' என்ற பாரம்பரிய பெயரில் அழைக்கப்படுகிறது.

அதன்படி நடைபெற்று வரும் இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 474 ரன்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா 2வது நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ரன்களுடன் தடுமாறி வருகிறது. பண்ட் 6 ரன்களுடனும், ஜடேஜா 4 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக இந்த போட்டிக்கான இந்திய அணியில் சுப்மன் கில் நீக்கப்பட்டு ஆல்ரவுண்டரான வாஷிங்டன் சுந்தர் சேர்க்கப்பட்டார். இந்த தொடரில் சுமாரான பேட்டிங்கை வெளிப்படுத்தி வந்ததால் அவர் நீக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில் சுப்மன் கில் நீக்கப்பட்டதற்கான காரணம் குறித்து இந்திய அணியின் துணை பயிற்சியாளர் அபிஷேக் நாயர் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "சுப்மன் கில்லுக்காக நான் வருந்துகிறேன். அவர் அணியில் இருந்து நீக்கப்படவில்லை. அணிக்கு தேவைப்படும் கலவையில் அவரால் தனது இடத்தை கண்டறிய முடியவில்லை. அதை அவரும் புரிந்து கொண்டார்" என்று கூறினார்.

# ஆட்டமிழந்து சென்றபோது எல்லை மீறி விமர்சித்த ரசிகர்கள்.. விராட் கோலி கொடுத்த ரியாக்ஷன்.. வைரல்



இந்தியா ஆஸ்திரேலியா இடையே பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் 4வது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங்கை தேர்வு செய்த ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 474 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா 2வது நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ரன்களுடன் தடுமாறி வருகிறது. இதில் 51 ரன்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய இந்திய அணியை ஜெய்ஸ்வால் விராட் கோலி பார்ட்னர்ஷிப் அமைத்து மீட்டெடுத்தனர். 100 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. 82 ரன்கள் அடித்த நிலையில் ஜெய்ஸ்வால் ரன் அவுட் ஆனார். அவரை தொடர்ந்து சிறிது நேரத்திலேயே விராட் கோலி 36 ரன்களில் கேட்ச் முறையில் ஆட்டமிழந்தார். விராட் கோலி ஆட்டமிழந்து பெவிலியன் சென்றபோது ஆஸ்திரேலிய ரசிகர்கள் கலாய்த்தனர். அதனை பொறுத்துக்கொண்டு சென்று கொண்டிருந்த விராட் கோலியை சிலர் எல்லை மீறி விமர்சித்துள்ளனர். இதனால் கோபமடைந்த விராட் திரும்பி வந்து அவர்களை முறைத்து பார்த்தார்.

இதனைக்கண்ட அங்கிருந்த பாதுகாவலர் கோலியை சமாதானம் செய்து திருப்பி அனுப்பி வைத்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இதனைக்கண்ட இந்திய ரசிகர்கள் விராட் கோலிக்கு ஆதரவாக கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட்; தீப்தி சர்மா அபார பந்துவீச்சு...வெஸ்ட் இண்டீஸ் 162 ரன்களில் ஆல் அவுட்

வெஸ்ட் இண்டீஸ் பெண்கள் கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரு ஆட்டங்களில் இந்தியா வெற்றி பெற்று தொடரை 20 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது. இந்த நிலையில் இவ்விரு அணிகள் மோதும் 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வதோதராவில் இன்று நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற வெஸ்ட் இண்டீஸ் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கியானா ஜோசப் மற்றும் ஹேலி மேத்யூஸ் களம் இறங்கினர். இருவரும் ரன் எடுக்காமல் டக் அவுட் ஆகினர். தொடர்ந்து களம் இறங்கிய டியான்ட்ரா டாட்டின் 5 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து ஷெமைன் காம்பெல்லே மற்றும் சினெல்லே ஹென்றி ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இதில் சினெல்லே ஹென்றி அரைசதம் அடித்த நிலையில் 61 ரன்னிலும், ஷெமைன் காம்பெல்லே 46 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து களம் இறங்கிய வீராங்கனைகள் சொற்ப ரன்களில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர்.

இதில் ஜைதா ஜேம்ஸ் 1 ரன், ஆலியா அலீன் 21 ரன், மாண்டி மங்ரு 9 ரன், அபி பிளெட்சர் 1 ரன், அஷ்மினி முனிசர் 4 ரன் எடுத்து அடுத்தடுத்து அவுட் ஆகினர். இறுதியில் வெஸ்ட் இண்டீஸ் 38.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 162 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய தீப்தி சர்மா 6 விக்கெட், ரேணுகா சிங் 4 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து 163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி ஆடி வருகிறது.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.